முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில், மதுரை மாவட்டம், கட்டுமானத் தொழிலுக்கு மணல் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. திருச்சியிலிருந்தோ, கரூரிலிருந்தோதான் மணல் மதுரைக்கு வந்து, அங்கிருந்து வாங்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் அங்குள்ள மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்கி, மதுரை மாவட்டத்திலேயே ஒரு மணல் குவாரியை அரசின் சார்பில் நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல, மதுரையில் ஒரு புதிய மணல் குவாரி அமைப்பதற்குண்டான ஆய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள் பேசுகின்றபோது, அனுமதி இல்லாமல் லாரிகளில் மணல் எடுத்துச் செல்லப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அதுபோல் இல்லை. 2011—2012 ஆம் ஆண்டு 5,315 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 ஏப்ரல் 11]

77—

தேன் ஆராய்ச்சி மையம்

825*—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதியில் தேன் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையளிக்கிறேன்.*

அரசியல் அறிவுச் சுரங்கம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதியில் தேன் ஆராய்ச்சி மையம் அமைக்கும் திட்டம் வருங்காலங்களில் அவசியம் ஏற்படின், அரசு அதுகுறித்து ஆராய்ந்து பரிசீலிக்கும் என்பதைப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு வட்டாரத்தில் சுமார் 25,000 ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் தேன் வளர்த்து, தேன் சேகரித்து விற்பனை செய்து வாழ்கிறார்கள். மார்த்தாண்டம் பகுதியில் தொற்றுநோய் தாக்கி தேனீக்கள் கொத்துக் கொத்தாக மடிந்துவிடுகின்றன. இதனால், விவசாயிகள் மற்றும் கூலிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. எனவே, இழப்புகளைத் தவிர்க்கவும், தேன் தொழில் அபிவிருத்தி அடையவும் புனேயில் அமைந்துள்ளதுபோன்று தேன் ஆராய்ச்சி நிறுவனம் மார்த்தாண்டத்தில் அமைத்திட வேண்டும். தேனில் ஈரப்பதம், நீரின் அளவு* (Moisture content level) *கண்டறிந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், தமிழ்நாட்டில் தேன் வளர்ப்புக் குழுமம்*

(Bee Keeping Mission) உருவாக்கி அதற்குத் தேவையான நிதியை தேசிய தேனீ வாரியத்திட (National Bee Board)-மிருந்து பெறலாம். தமிழகத்தில் தேன் ஆராய்ச்சிக் குழுமம் இதுவரை அமைக்கப்படாமல் இருக்கிறது. அதைப் பரிசீலிக்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, கேள்விக்கு வாருங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: எனவே, இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேன் ஆராய்ச்சி மையத்தை மார்த்தாண்டம் பகுதியில் பரிசீலித்துக் கொண்டுவருவார்களேயானால், அந்தத் தொழிலில் இருக்கும் அனைவருக்கும், விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் அம்சி என்ற இடத்திலும், திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலை ஜமுனாமரத்தூர் என்ற இடத்திலும் தேன் நிரப்பும் மற்றும் பதப்படுத்தும் அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் மார்த்தாண்டம் தேனீ வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. அச்சங்கத்தின்மூலம் தேன் கொள்முதல் செய்யப்பட்டு, பதப்படுத்தி விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், திருப்பூர், திருச்சி, திருநெல்வேலி, சென்னை குறளகம் ஆகிய இடங்களில் உள்ள தேன் நிரப்பும் நிலையங்கள்மூலம் பாட்டில்களில் தேன் நிரப்பப்பட்டு, கதர் அங்காடிகளின்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

தேனீ வளர்ப்போருக்கு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் பயிற்சி வழங்கப்படாமல் விட்டாலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள பூச்சியியல் துறை மூலமாக ஒவ்வொரு மாதமும் 6 ஆம் தேதியில் குறைந்தபட்சம்

2012 ஏப்ரல் 11]

25 நபர்களுக்கு ஒரு நாள் தேனீ வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட நபர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

முற்பகல் 10—45

பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கின்ற ஆராய்ச்சி நிலையம் குறித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, வருகின்ற காலங்களில் தேவைப்படின் அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

சுற்றுலாத் தலம்

***5455—டாக்டர் வைகைச்செல்வன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருள்மிகு இருக்கன்குடி மாரியம்மன் கோயில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதிக்கு உட்பட்ட சாத்தூரிலிருந்து சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவில் வைப்பாறு மற்றும் அர்ஜுனா ஆறு ஆகிய இரண்டு ஆறுகளுக்கு இடையே இருகங்கைக்குடி என்ற பெயரால் அழைக்கப்பட்டு, பின்னாளில் அப்பெயர் மருவி, இருக்கன்குடி